# கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு

# NAITA
## National Apprentice & Industrial Training Authority

**இவ் அதிகாரசபையில் உள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதியான இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

## பணிப்பாளர் (பயிற்சி) பதவி - 01 பதவி

**தகுதிகள் மற்றும் அனுபவம் :-**

**வெளிப் பணியாளர்கள் :-** (கீழ்வரும் 01 அல்லது 02)

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (U.G.C) அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் / தொழில்நுட்பம் / கல்வி / விஞ்ஞானம் / விவசாயம் / கணிதம் ஆகிய பாடத்துறைகளில் ஒன்றில் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

    உடன்

    மேற்குறிப்பிட்ட பாடத்துறைகளில் ஒன்றில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முதுமாணிப் பட்டப் பின்படிப்பு (Masters) அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்முறை பட்டய நிறுவனம் / இலங்கை பொறியியலாளர் நிறுவனம் (IESL) ஆகியவற்றின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

    மற்றும்

    தகைமை பெற்றதன் பின்னர், ஒரு கூட்டுத்தாபனம், மாகாண சபை அல்லது ஒரு புகழ்பெற்ற வணிக நிறுவனத்தில் பதவியின் பாடத்துறைக்குத் தொடர்புடைய முகமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 15 வருட கால அனுபவம் பெற்றிருத்தல்.

02. மேற்குறிப்பிட்ட பாடத்துறைகளுக்குத் தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்முறை பட்டய நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவத்தைப் (Full Membership) பெற்றிருத்தல்.

    மற்றும்

    தகைமை பெற்றதன் பின்னர், ஒரு கூட்டுத்தாபனம், மாகாண சபை அல்லது ஒரு புகழ்பெற்ற வணிக நிறுவனத்தில் பதவியின் பாடத்துறைக்குத் தொடர்புடைய முகமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 15 வருட கால அனுபவம் பெற்றிருத்தல்.

**உள் பணியாளர்கள் :-** (கீழ்வரும் 01 அல்லது 02)

01. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிப் பணியாளர்களுக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
02. NAITA நிறுவனத்தில் முகாமையாளர் வகைப்பாட்டின் (MM 1-1) தரம் I அல்லது கல்வி / ஆராய்ச்சி (AR-1 தரம் I) வகைப்பாட்டிற்குரிய பதவியில் அல்லது பதவியின் பாடத்துறைக்குத் தொடர்புடைய (AR-2) வகைப்பாட்டில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு -** ரூ. **140,640 - 15 x 4,100 - 202,140 (HM 1-1)**

**அடிப்படைச் சம்பளப் படி -**

ரூ. **123,019/-** (முகமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல. 01/2025 இன் அட்டவணை 11 இன்படி)
(மேலதிகமாக, அங்கீகரிக்கப்பட்ட அரச கொடுப்பனவுகள் + திறைசேரி சுற்றறிக்கைகளுக்கு அமைவாக போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு வசதிகள் வழங்கப்படும்.)

## பணிப்பாளர் / அதிபர் பதவி
### (தொழில்நுட்ப பொறியியல் பயிற்சி நிறுவனம், கட்டுபெத்த) - 01 பதவி

**தகுதிகள் மற்றும் அனுபவம் :-**

**வெளிப் பணியாளர்கள் :-** (கீழ்வரும் 01 அல்லது 02)

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (U.G.C) அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் /தொழில்நுட்பம் /கல்வி /விஞ்ஞானம் /விவசாயம் /கணிதம் ஆகிய பாடத்துறைகளில் ஒன்றில் சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

    உடன்

    பொறியியல் / தொழில்நுட்பம் / கல்வி / விஞ்ஞானம் / விவசாயம் / கணிதம் ஆகிய துறைகளில் ஒன்றில் முதுமாணிப் பட்டப் பின்படிப்பு (Masters) பெற்றிருத்தல்.

    மற்றும்

    பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்த பின்னர், ஒரு கூட்டுத்தாபனம், சபை / மாகாண நிறுவனம் அல்லது ஒரு புகழ்பெற்ற பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் எட்டு (08) வருட கால ஆராய்ச்சி / கல்விசார் (Research / Academic) அனுபவம் பெற்றிருத்தல்.

02. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் / தொழில்நுட்பம் / தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி / விஞ்ஞானம் / விவசாயம் / கணிதம் ஆகிய பாடத்துறைகளில் ஒன்றில் சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

    உடன்

    தொடர்புடைய துறையில் கலாநிதி (PhD) பட்டம் பெற்றிருத்தல்.

    மற்றும்

    பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்த பின்னர், ஒரு கூட்டுத்தாபனம், சபை / மாகாண நிறுவனம் அல்லது ஒரு புகழ்பெற்ற பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால ஆராய்ச்சி / கல்விசார் அனுபவம் பெற்றிருத்தல்.

**உள் பணியாளர்கள் :-** (கீழ்வரும் 01, 02, 03, 04 அல்லது 05)

01. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிப் பணியாளர்களுக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
02. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பொறியியல் / தொழில்நுட்பம் / தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி ஆகிய பாடத்துறைகளில் ஒன்றில் பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது விஞ்ஞானம் / விவசாயம் / கணிதம் ஆகிய பாடத்துறைகளில் சிறப்புப் பட்டம் அல்லது தொழில்நுட்பம் / கல்வி / விஞ்ஞானம் / கணிதம் ஆகிய பாடத்துறைகளில் பொதுப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

    உடன்

    பொறியியல் / தொழில்நுட்பம் / தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி / விஞ்ஞானம் / விவசாயம் / கணிதம் ஆகிய பாடத்துறைகளில் முதுமாணிப் பட்டப் பின்படிப்பு (Masters) பெற்றிருத்தல்.

    மற்றும்

    கல்விசார் / ஆராய்ச்சி (AR-1) வகைப்பாட்டிற்குரிய பதவியில் குறைந்தபட்சம் எட்டு (08) வருடங்கள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

03. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் / தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமை (NVQ) மட்டம் 07 இற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

    உடன்

    தொழில்நுட்பம்/ தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி ஆகிய பாடத்துறைகளில் முதுமாணிப் பட்டப் பின்படிப்பு (Masters) பெற்றிருத்தல்.

    மற்றும்

    கல்விசார் / ஆராய்ச்சி (AR-1) வகைப்பாட்டிற்குரிய பதவியில் குறைந்தபட்சம் பன்னிரண்டு (12) வருடங்கள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

04. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்படும் பொறியியல் தொழில்நுட்ப டிப்ளோமா (NDT/NDES/HNDE/D.Tech) படிப்பினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது TVEC இனால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட NVQ மட்டம் 06 இற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

    உடன்

    பொறியியல் / தொழில்நுட்பம் / கல்வி / விஞ்ஞானம் / விவசாயம் / கணிதம் ஆகிய பாடத்துறைகளில் இரண்டு வருட கால முதுமாணிப் பட்டப் பின்படிப்பு பெற்றிருத்தல்.

    மற்றும்

    கல்விசார் / ஆராய்ச்சி (AR-1) வகைப்பாட்டிற்குரிய பதவியில் குறைந்தபட்சம் பதினான்கு (14) வருடங்கள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

05. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பொறியியல் / தொழில்நுட்பம் / கல்வி / விஞ்ஞானம் / விவசாயம் / கணிதம் ஆகிய பாடத்துறைகளில் ஒன்றில் பட்டத்தைப் பெற்றிருப்பதுடன் தொடர்புடைய துறையில் கலாநிதி (PhD) பட்டம் பெற்றிருத்தல்.

    மற்றும்

    கல்விசார் / ஆராய்ச்சி (AR-1) வகைப்பாட்டிற்குரிய பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு -** ரூ. **133,220 - 10 x 3,600 - 169,220 (AR-2)**

**அடிப்படைச் சம்பளப் படி -**

ரூ. **116,763/-** (முகமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல. 01/2025 இன் அட்டவணை 11 இன்படி)
(மேலதிகமாக, அங்கீகரிக்கப்பட்ட அரச கொடுப்பனவுகள் + திறைசேரி சுற்றறிக்கைகளுக்கு அமைவாக தகவல் தொடர்பு வசதிகள் வழங்கப்படும்.)

## உதவிப் பணிப்பாளர் (மனிதவள முகாமைத்துவம்) பதவி - 01 பதவி

**தகுதிகள் மற்றும் அனுபவம் :-**

**வெளிப் பணியாளர்கள் :-**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (U.G.C) அங்கீகரிக்கப்பட்ட மனிதவள மேலாண்மை, பொது நிர்வாகம் அல்லது வணிக நிர்வாகம் ஆகிய பாடத்துறைகளில் ஒன்றில் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

உடன்

தகைமை பெற்றதன் பின்னர், ஒரு கூட்டுத்தாபனம், மாகாண சபை / நிறுவனம் அல்லது ஒரு புகழ்பெற்ற வணிக நிறுவனத்தில் மனிதவள மேலாண்மை பாடத்துறையில் உதவி முகாமையாளர் மட்டத்தில் (Junior Manager Level) குறைந்தபட்சம் மூன்று (03) வருட கால அனுபவம் பெற்றிருத்தல்.

**உள் பணியாளர்கள் :-** (கீழ்வரும் 01 அல்லது 02)

01. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிப் பணியாளர்களுக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
02. பதவிக்குத் தொடர்புடைய பாடத்துறையில், உதவி முகாமையாளர் (Junior Manager - JM 1-1) வகைப்பாட்டிற்குரிய பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு -** ரூ. **91,690 - 10 x 2,480 - 15 x 3,450 - 168,240 (MM 1-1)**

**அடிப்படைச் சம்பளப் படி -**

ரூ. **81,710/-** (முகமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல. 01/2025 இன் அட்டவணை 11 இன்படி)
(மேலதிகமாக, அங்கீகரிக்கப்பட்ட அரச கொடுப்பனவுகள் + திறைசேரி சுற்றறிக்கைகளுக்கு அமைவாக தகவல் தொடர்பு வசதிகள் வழங்கப்படும்.)

## சபைச் செயலாளர் மற்றும் சட்ட உத்தியோகத்தர் பதவி - 01 பதவி

**தகுதிகள் மற்றும் அனுபவம் :-**

**வெளிப் பணியாளர்கள் :-**

சட்டத்தரணி மற்றும் பகிரங்க நொத்தாரிசு (Attorney at Law and Notary Public) தகைமையுடன், ஒரு கூட்டுத்தாபனம், மாகாண சபை / நிறுவனம் அல்லது ஒரு புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் தகைமை பெற்றதன் பின்னரான மூன்று (03) வருட கால அனுபவம் பெற்றிருத்தல்.

**உள் பணியாளர்கள் :-**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிப் பணியாளர்களுக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு -** ரூ. **91,690 - 10 x 2,480 - 15 x 3,450 - 168,240 (MM 1-1)**

**அடிப்படைச் சம்பளப் படி -**

ரூ. **81,710/-** (முகமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல. 01/2025 இன் அட்டவணை 11 இன்படி)
(மேலதிகமாக, அங்கீகரிக்கப்பட்ட அரச கொடுப்பனவுகள் திறைசேரி சுற்றறிக்கைகளுக்கு அமைவாக தகவல் தொடர்பு வசதிகள் வழங்கப்படும்.)

## சாரதி தரம் III பதவி - 07 பதவிகள்
### (தலைமையகம் / IET - கட்டுநாயக்க / மாவட்ட அலுவலகங்கள் - கொழும்பு, கண்டி, கிளிநொச்சி, வவுனியா, கேகாலை)

**தகுதிகள் மற்றும் அனுபவம் :-**

**வெளிப் பணியாளர்கள் :-**

அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருத்தல் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றதன் பின்னர் குறைந்தபட்சம் மூன்று (03) வருட கால ஓட்டுநர் அனுபவம் பெற்றிருத்தல்.

**உள் பணியாளர்கள் :-**

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருத்தல் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றதன் பின்னர் குறைந்தபட்சம் மூன்று (03) வருட கால ஓட்டுநர் அனுபவம் பெற்றிருத்தல்.

மற்றும்

ஆரம்பநிலை அரைத் தேர்ச்சியுடைய (Primary Level Semi Skilled - PL 2) அல்லது ஆரம்பநிலைத் தேர்ச்சியற்ற (Unskilled - PL 1) வகைப்பாட்டிற்குரிய பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு -** ரூ. **43,280 - 10 x 490 - 10 x 540 - 10 x 590 - 12 x 630 - 67,040 (PL-3)**

**அடிப்படைச் சம்பளப் படி -**

ரூ. **40,834/-** (முகமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல. 01/2025 இன் அட்டவணை 11 இன்படி)
(அங்கீகரிக்கப்பட்ட அரச கொடுப்பனவுகள் வழங்கப்படும்.)

## வயதெல்லை:-

**பணிப்பாளர் (பயிற்சி)**
- குறைந்தது 35 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**பணிப்பாளர் / அதிபர்** (தொழில்நுட்ப பொறியியல் பயிற்சி நிறுவனம், கட்டுபெத்த)
- குறைந்தது 30 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**உதவிப் பணிப்பாளர் (மனிதவள மேலாண்மை) / சபைச் செயலாளர் மற்றும் சட்ட உத்தியோகத்தர்**
- குறைந்தது 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சாரதி**
- குறைந்தது 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:** மேலதிக வயது வரம்பு உள் பணியாளர்களுக்குப் பொருந்தாது.

## விண்ணப்பிக்கும் முறை

அதிகாரப்பூர்வ இணையதளத்தில் (https://www.naita.gov.lk) குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2026 ஏப்ரல் 01ம் திகதி அல்லது அதற்கு முன் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

கடிதவுறையின் இடப்புற மேல் மூலையில் **விண்ணப்பிக்கும் பதவியின் பெயரும் "வெற்றிடங்கள் 2026"** என்று தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க வேண்டுமானால் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்களை, சான்றிதழ்களின் சுய சான்றளிக்கப்பட்ட நகல்களுடன், தனித்தனி கடிதவுறைகளில் சமர்ப்பிக்க வேண்டும். அமைச்சுகள், அரசுத் திணைக்களங்கள் மற்றும் சட்டபூர்வ அமைப்புகளில் பணிபுரிபவர்கள், தங்கள் நிறுவனம் சார்ந்த தலைவரின் வழியாகவே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும். மேலும், தெரிவு செய்யப்பட்டால் அவர்களை விடுவிக்கக் முடியுமா என்பதை அந்த தலைவர் உறுதிப்படுத்த வேண்டும்.




தலைவர்
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை,
971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை, ராஜகிரிய.
தொலைபேசி : 011 2888782-5